# ரவி ஷங்கர் (Astana Arts)



"உலக வாழ்க்கை நடனம்,
நீ ஒத்துக்கொண்ட பயணம்
அது முடியும் போது தொடரும்
நீ தொடங்கும் போது முடியும்!!"

நான்கே வரிகளில் வாழ்வியல் தத்துதுவத்தை எத்துனை அழகாக விவரிக்கின்றது இப்பாடல்? வாழ்வில் நாம் சந்திக்கும் எந்த சூழலையும் நம்மால் அனுமானிக்க முடியாது என்பதையே இப்பாடல் வரிகள் உணர்த்துகின்றன.. அது சரி இந்த பாடலுக்கும் நமது வெற்றியாளருக்கும் என்ன தொடர்பு என கேள்வி எழுப்புகிறீர்களா? கட்டாயம் உண்டு! மலேசிய மண்ணில் கலையார்வம் கொண்ட பலருக்கும் அஸ்தானா ஆர்ட்ஸ் (Astana Arts) எனும் கலை நிருவனத்தை தெரியாமல் இருக்காது. வாழ்வில் தான் கடந்துவந்த விசித்திரமான அவிபரீதமான சூழல்களையெல்லாம் படிக்கல்லாகக்கொண்டு இந்தியர்களின் நடனக்கலையை தனக்கே உரிய பாணியில் மிக சிறப்பாக வழங்கிக்கொண்டிருக்கும் திரு.ரவி ஷங்கர்தான், இந்நிலையத்தின் நிருவனர்.

ஒருவர் தன் வாழ்வில் முன்னேர பலரும் ஊன்றுகோளாகவும் தூண்டுகோளாகவும் இருந்துவிடலாம். ஆனால், மனிதனானவன் தன் நெஞ்சில் தன் ஆசையையும் லட்சியத்தையும் விதைக்கவில்லை எனில் வெற்றிகள் என்பன எட்டாக் கனிகளே! அவ்வகையில், வாழ்வில் போராட்டங்களே வாழ்க்கையாகிப் பழகிப்போன திரு.ரவி தன் வாழ்வில் கண்ட துன்பங்கலும் துயரங்கலும் எழுத்தில் மாலாது!

ஒரு சதாரன நடுத்தர குடும்பத்தின் ஒரே தவப்புதல்வன் தான் இவர். தந்தை திரு.ராமமூர்த்தி தாயார் திருமதி.பரமேஸ்வரியின் அரவணைப்பில் மிகச் செல்லமாக வளர்ந்தார். மற்றவர்களைப்போல் இல்லாமல் எல்லாவற்றிலும் வித்தியாசத்தை கடைப்பிடிக்கும் திரு. ரவியின் சிறு வயது அனுபவம்கூட வித்தியாசமானதுதான். ஆம், மற்றவர்களைப்போல் தனது 7-வது வயதில் ஆரப்பக்கல்வியை கற்காமல் 8-வது வயதில் முதலாம் ஆண்டில் கால் பதிக்காமலேயே இரண்டாம் ஆண்டுக்குள் குதித்துவிட்டார் இவர். பிரிக்பீல்ட்சில் இருக்கும் விவேகானந்தர் தமிழ்பள்ளிதான் இவரது ஆரம்பக்கல்விக்கு அஸ்திவாரமிட்டது. ஆனால், ஒன்றாம் ஆண்டு படித்துவிட்டு இரண்டாம் ஆண்டிற்குள் புகும் மாணவர்களுடன், மல்லுக்கட்ட மிகவும் சிரமப்பட்டார். நண்பர்களின் வற்றாத கேலிப் பேச்சுகலுக்கும் நையாண்டி வார்த்தைகளுக்கும் ஆளானார். வெறுமனே தன்னைப்பற்றி வசைப்பாடும் தன் நண்பர்களின் வாயை எப்படியாவது மூட வேண்டும் என திட்டம் தீட்டினார். அதனால், ஆசிரியர்களின் உதவியுடனும் தன் சுய முயற்சியுடனும் தீவிரமாக படித்தார்; போருக்கு புரப்படும் தளபதியைப்போல. இறுதியில் பள்ளியின் 6-ஆம் ஆண்டு தேர்வில் 10 சிறந்த மாணவர்களுள் ஒருவராகாத் தேர்வுப் பெற்றார். இதில் என்ன சாதனையிருக்கின்றது என நீங்கள் வினவலாம்? ஆனால், விளையாட்டு மட்டுமே உலகம் என் வாழும் அந்தக் குழந்தை பருவத்தில் கூட, தன்னுள் ஒரு வைராக்கியத்தை விதைத்து முயற்சி செய்ததால்தான், அவரால் சாதிக்கமுடிந்தது எனில் அது மிகையாகாது.

அதே வைராக்கியத்துடன்தான் இன்றளவும் செயல்பட்டு, மலேசிய மக்களுக்கு மத்தியில் அறிமுகம் தேவையில்லா நட்சத்திரமாக மிளிர்ந்து வருகிறார். திரு.ரவி.

"எந்தக்குழந்தையும் நல்லக்குழந்தைதான் மண்ணில் பிறக்கையிலே, அது நல்லவன் ஆவதும் தீயவனாவதும் அன்னை வளர்ப்பினிலே என்கிறது ஒரு தத்துவப்பாடல். ஆக, ஒரு சிசுவை உலகுக்கு உயர்ந்த மனிதனாக அடையாளம் காட்ட வேண்டியதும் ஒரு தாயின் கடமைதாம். ஆனால், அன்னை மடியில் அழகாக வாழ வேண்டிய தனது 15-வது வயதிலேயே தாயை இழந்து தனியாக விடப்பட்டார் திரு.ரவி. சில நாட்கள் உறவினர்களின் நிழலில் வாழ்ந்தார். அங்கோ, பாசத்தைக் காட்ட மறுத்த உறவினர்களின் முகச் சாயங்கள் சில நாட்களில் வெளுத்துப்போயின. தாயில்லாத பிள்ளையை நன்றாகப் படிக்க வைக்காவிட்டாலும் பரவாயில்லை, ஆனால், சம்பளம் இல்லாத வேலைக்காரனாக நடத்த முற்பட்ட போது, அந்த பிஞ்சி உள்ளம் எத்துனைப்பாடுபட்டிருக்கும்? தாயின் அன்புக்காக ஏங்கித் தவித்து, ஒரு வாய் உணவு ஊட்டக்கூட ஆளில்லாமல் அனாதையாக நின்ற அந்த இளமைப்பருவ வேதனைகளையெல்லாம் தன்னுள்ளே புதைத்துக்கொண்டு, தனக்குத் தானே ஆறுதல் கூறிக்கொண்டு பக்குவமாக வாழ பழகிக்கொண்டார். இன்றைய தேதியில், சுண்டைக்காய் விஷயங்களுக்கெல்லாம் தற்கொலை முயற்சியில் ஈடுபடும் சிறுவர்களுக்கும் இளைஞர்களுக்கும் மத்தியில், அன்றே, தன்னை துன்புறுத்தும் உலியினை தாங்கும் கல்லாய் உறுதியாக நின்றார். இன்றோ, மலேசிய கலையுலகின் சிற்பமாக ஒளிர்கிறார்.

அந்த சிறுவயதில் தனக்கு கிடைத்த மிகப் பெரிய அனுபவங்களால்தான், மனிதனுக்கு எந்த உறவுமே நிரந்திரமில்லை என்று உணர்ந்தார். உடலில் உயிர் கொடுத்து பெற்று வளர்த்த மகனே, மிஞ்சிப்போனால் இடுகாடு வரைதான் நம்முடடன் வரப்போகிறான்! இதுதான் வாழ்வியல் உண்மை! எனவே இனியும், மற்றவர்களை நம்பி பயனில்லை என தெளிந்து, தன் உறவினர்களின் வீட்டை விட்டு வெளியேரி தனியாக



வாழ்ந்தார். தன்னையும் தன் கல்வி செலவுகளையும் ஈடுக்கட்ட அங்காடிகளிலும், பேரங்காடிகளிலும் வேலை செய்தார்.

காலம் தன் கடனை செவ்வனே செய்தது. இடைநிலைபடிப்பை முடித்த திரு.ரவிக்கு பல்கலைக்கழகம் புகும் வாய்ப்பு கிட்டியது. புத்ரா பல்கலைகழகத்தில், ஆங்கில கலை & வணிச் செயலாளுமைதுறையில் (Bachelor arts English & Business Admin) பட்டம் பெற்றார். அதோடு மட்டும் நின்றுவிடாமல், தன், திறமையையும் ஆற்றலையும் அங்குதான் அவர் வெளிக்கொணர்ந்தார். பல்கலைக்கழகம் என்பது நம் எதிர்காலத்தில் வேலை வாய்ப்பினை தேடிதரும் தளம் மட்டுமல்ல, மாறாக பல கலைகலைக் கற்றுத்தரும் தடமுமாகும் என்கிறார், திரு.ரவி. ஏனெனில் சி\று வயதில், பாண்டிய நெடுஞ்செழியனின் நாடகத்தில் நடித்தபோது, கலைத்துறையின் மேது அவருக்கு ஏற்பட்ட பற்று, பல்கலைக்கழகத்தில்தான் பெருக்கெடுத்து ஓடியது. பல்கலைக்கழகத்தில் தன்னுடன் ஒரே அறையில் வசித்த நண்பரது பெயரைக்கூட தெரியாமல் இருக்கும் ஒருசில மாணவர்களுக்கு மத்தியில், ரவி என்றால் அனைவருக்கும் தெரிந்த நிலையில் தன் திறமையினால் பிரசித்திப்பெற்றார். எதையும் வித்தியாசமாகச் செய்யவேண்டும் என்று நினைக்கும் திரு.ரவி, பல்கலைக்கழக கலை நிகழ்ச்சிகளில் பங்குகொள்வது மட்டுமின்றி, இந்தியர்களில் கலைத்துறையில் குறிப்பாக புத்ரா பல்கலைக்கழகக் கலைத்தைுரையில் புதிய பரிநாமத்தை உறுவாக்கியேத் தீர வேண்டும் என சிந்திக்களானார். அவருடைய அந்த சிந்தையில் உதிர்ந்த முத்துதான், அப்பல்கலைக்கழகத்தில் முதல் முதலாக இந்தியர் பாரம்பரிய நடனக் கழகம் தோற்றுவிக்கப்பட்டது.

பல்கலைக்கழக வாழ்க்கை முற்றுப்பெற்றப் பின்னர் தன் கலைதுறைக்கு முழுக்குப்போடவில்லை திரு.ரவி. பிறவியிலேயே ஒளிசிந்தும் வைரமானாலும், பட்டைதீட்டத் தீட்டத்தானே மெருகேரும், அதுப்போல கலைத்துறையில் தன் நிலையை மேலும் பட்டைத்தீட்ட எண்ணினார். பரதம், ஒடிசி, குச்சிப்பொடி என இந்தயர்களின் பாரம்பரிய நடனங்களை முறையாக கற்றுக்கொண்டார். அதன் பின், நாடகம், கலை நிகழ்ச்சிகள் என திரு,ரவியின் கலைப் பயணம் தொடர ஆரம்பித்தது, எது எப்படி இருந்தாலும் தன் எதிர்கால வாழ்க்கையைப் பற்றியும் இவர் சிந்திக்காமல் இல்லை. தன் பட்டப்படிப்புக்கு ஏற்றார் போல் ஆஸ்ட்ரோவின், குடைக்கு கீழ் இயங்கிவரும் ஆஸ்ட்ரோ ரியாவில் (Astro ria) பணிக்கு அமர்ந்தார். பின் ஹிட்ஸ் டோட் டிவி(hitz dot TV) என்ற மலாய் ஒளியலையில் வேலைப்பார்த்தார். அதன் பிறகு கொஞ்சம் கொஞ்சமாகத்தன் நிலையை உயர்த்திக்கொண்டு, மலேசியாவின் முதல் நிலை தமிழ் வானொலி நிலையமான தி.ஹெஸ். ஆரில் ராகாவில் (T.H.R. Raaga) Promo-

tion and programming Department-யின் மேலாராகப் கடந்த சனவரி 2009 வரை பணிப்புரிந்தார்.

இந்நிலையில் தன் கலை ஆர்வத்தையும் துரந்துவிடவில்லை அவர். மலேசிய இந்திய பாரம்பரிய நடனத்திற்கு, ஒரு புதிய மலர்ச்சியையும் பொழிவையும் கொடுக்க இவர் மிகுந்த சிறத்தை எடுத்துக்கொண்டார். பெரும்பாலும் பாரம்பரிய நடனம் என்றாலே முகத்தை திருப்பிக்கொள்ளும் இந்தியர்களுக்காகவே பிரத்தியேகமாக "•பூயூசன்" நடனத்தை அறிமுகப்படுத்தனார். மேலும், இந்தியர்களின் பாரம்பரிய நடனம் முதல், மலாய்காரர்கள் மற்றும் பிற அண்பர்களின் நடனங்களையும் ஒரே படைப்பில் வழங்குவதில் இவர் கில்லாடி. ஆக, வித்தியாசமாக செயல்படுத்தப்பட்ட இவரது நடன அமைப்பால் இந்தியர்கள் மட்டுமின்றி பிற இனத்தவர்கலும் கவர்ப்பட்டனர். இவரது இத்தகைய முயற்சிகளுக்கு கிடைத்த வெற்றிதான், இவரது மேற்பார்வையின் கீழ் இயங்கிவரும் மலேசிய புத்ரா பல்கலைக்கழகத்தின் புத்ரா கலாக்ஷெத்ரா, மலேசிய தேசியப் பல்கலைக்கழகத்தின் ராசா லாவண்யா மற்றும் மலாயா பல்கலைக்கழகத்தில் வெற்றி நடைபோட்டுவரும் ஸ்வர்ணா மலாயா, போன்ற நடனக்கழகங்கள். அதே சமயம் மலாயா பல்கலைக்கழகத்திலும், மலேசிய தேசியப் பல்கலைக்கழகத்திலும் இவர், புறப்பாட நடவடிக்கைகளுள் ஒன்றாக நடனத்தையும் கற்றுத்தருகிறார்.

தன்னால் இயன்றவரை மலேசிய இந்தய பாரம்பரிய நடன உலகுக்கு மறுமலர்ச்சியை ஏற்படுத்த வேண்டும் என்ற இவரது முயற்சிக்கு நம்மவர்களின் ஆதரவைவிட மர்றவர்கலின் ஆதரவே அதிகமாக உள்ளன் என்பதுதான் நிதர்சனம். ஒரு சிலர் தங்களுக்கென ஒரு வட்டத்தைபோட்டுக்கொண்டு அந்த வட்டத்தை விட்டு வெளிவர மறுக்கின்றனர். ஒரு சிலரோ, தங்களுக்கென சொந்தமாக நடனக்குழுக்களை அமைத்துக்கொண்டு சினிமாத்தனமான நடனக்களை ஆடுவைதிலும் அவற்றைக் கற்றுக்கொள்வதிலுமே அதிகமான நேரத்தையும் திறமையயும் விரயமாக்குகின்றனர். ஆனால் அதுவல்ல கலை! சில மாற்றங்களையும் புதுமைகளையும் தன்னகத்தே சுமந்து, தனக்கென ஒரு ரகத்தை (brand) பெற்றிருப்பதுதான் கலையெனும் துறை. இந்தக்கோட்பாடு நடனக்கலைக்கு மட்டுமல்ல மற்ற எல்லாத்துறைகளுக்கும் பொருந்தும். செய்யும் தொழிலில் நேர்மையும் வித்தியாசத்தையும் கடைபிடித்தால்தான் வாடிக்கையாளர்கள் நம்மீது நன்மதிப்பி பெற்றிருப்பர், என்று கூறுகிறார் திரு.ரவி.

ஆகவேதான், தனது அத்துனை அலுவல்களுக்கு மத்தியிலும் அஸ்தானா ஆர்ட்ஸ் எனும் தன் சொந்த நடன நிருவனத்தை நிருவினார் இவர். பெரும்பாலும் பாரம்பரிய நடனமென்றால், ஒவ்வொன்றும் தனிதனியாகா, வேறு வேறு ஆசிரியர்களால் கற்றுதரப்படும்

என்பதே நமக்குத் தெரிந்த விஷயம். ஆனால், திரு.ரவியின் கலை நிருவனத்தில் இத்தகைய நிலையை காண முடியாது. ஏனெனில், படைபுக்கலையில்(performing arts) ஒரே மேடையில் ஒரே பாடலுக்கு பல அபினயங்கள் கொண்ட நடனத்தை கண்டால் எப்படி இருக்கும்? அந்த பிரமாண்டத்தை வார்த்தைகளால் விவரிக்கமுடியாது எனக் கூறுகின்றனர் அவருடைய நடனத்தைக் கண்ட ரசிகர்கள்.

ஆக நடன இயக்குனராக இருந்துக்கொண்டு, தனது சொந்த நடன நிருவனத்தையும் செயல்படுத்திக்கொண்டு, தன் மேற்கல்வியை மாஸ்டர்ஸ் (masters) வரையிலும் படித்து வரும் திரு.ரவியினால் இந்த நிலைகளை எப்படி சமாளிக்க முடிகிறது? மிகச் சுலபம், எல்லாம் நேர நிர்மானிப்பு, எதையும் திட்டமிட்டு செயல்படுத்தனால் எல்லாம் சாத்தியமே என்கிறார் புன்னகைத்தவாறு. அதே சமயம், வாழ்வில் வெற்றிப்பெற கடுமையான உழைப்பை மூலதனமாகப் போடுவதைதைவிட திறமையான உழைப்பை போட்டாலே போதும். ஏனெனில் திறமை மிகுந்தவன் ஒரு விஷயத்தை ஒரு முறை செய்தாலும் அதனை தரமாக செய்து முடித்துவிடுவான். குயவனின் பாண்டம் போல், சிற்பியின் சிற்பம்போல், நெசவாளியின் சேலைப்போல், திரு.ரவியில் மேடைகலைபடைப்பு அமைந்திருக்கும்! ஒரே ஒரு படைப்பு என்றாலும் தன்னைவிட வேராராலும் அப்படைப்பை மிகச்சிறாப்பாக படைத்துவிட முடியாத அளவுக்குச் செய்து முடிப்பதே திரு,ரவியின் தனித் திறமை!!

